தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் ECOFEST'15- பசுமைமாரத்தான் (முதல் வேளாண் மாரத்தான்)

கோவையின் 109 ஆண்டுகள் பழமை வாய்ந்த தற்பெருமைக்குரிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் முதன்முதற் வேளாண் மாரத்தான்- "**பசுமை மாரத்தான்**" வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன இளங்கலை (ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் துறை) மாணவர்களால் 23 ஆகஸ்ட், 2015 அன்று ஏற்பாடு செய்யப்பட்டு நிகழ்த்தப்படவிருக்கிறது. இது **ஆற்றல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு** என்பதனை கருப்பொருளாகக் கொண்டு நடத்தப்படவிருக்கும் ஒன்பதாவது தேசிய அளவிலான மாநாட்டின் (**ECOFEST'15**) ஒரு முன்னோட்ட நிகழ்வாகும்.

இந்நிகழ்வில் முதன்மையாக முனைவர்.சி.சைலேந்திரபாபு, இந்தியகாவல் துறை, கூடுதல் பொதுகாவல் துறை இயக்குனர், தமிழ்நாடு கடலோர பாதுகாப்பு குழு, அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்களிக்கிறார். முனைவர்.கே.இராமசாமி, பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் கொடியசைத்த வண்ணம் இந்நெடுநீள ஓட்டப்போட்டியைத் துவக்கிவைக்க விருக்கிறார். மாநகரைச் சுற்றி ஏறத்தாழ 1500 பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் பங்களிப்பு இதில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாரத்தான் காலை 6.30 மணியளவில் RI கட்டிடத்தில் இருந்து துவங்கி மாநகர் சாலைகள் வழியாகப் பல்கலைக்கழக விளையாட்டரங்கில் முடியும் படி திட்டமிடப்பட்டுள்ளது.

| | **பிரிவு** | **வயது** | **தொலைவு** |
|---|---|---|---|
| 1 | ஆண்கள் | 18 வயதுக்கு மேல் | 9 கி.மீ |
| 2 | பெண்கள் | 18 வயதுக்கு மேல் | 7 கி.மீ |
| 3 | பள்ளிமாணவர்கள் | 18 வயதுக்கு கீழ் | 7 கி.மீ |
| 4 | பள்ளிமாணவியர்கள் | 18 வயதுக்கு கீழ் | 5 கி.மீ |

போட்டிக்கான பதிவீடானது ஆகஸ்ட் 5-ம் தேதியிலிருந்து வடகோவை சப்னா புத்தக நிலையத்திலும், ஆகஸ்ட் 15-ம் தேதியிலிருந்து கோவை நேரு விளையாட்டு அரங்கிலும் கல்லூரி

மாணவர்களுக்கு ரூபாய்.100 நுழைவுக்கட்டணம் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் போட்டி நிகழ்விடத்திலும் காலை 5.30 மணியிலிருந்து நிகழ்விடப் பதிவீடு நடத்தப்படும். இம்மாரத்தான் கோயம்புத்துார் மாவட்ட அத்லடிக் அசோசியேஷனால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். பரிசுத்தொகை ரூபாய் 50,000க்கான ஊக்க ஆதரவானது KCP சேலம் சூரியசக்தி தொழில் நிறுவனத்தாராலும், தொழில்நுட்பரீதியிலான ஆதரவானது கோவை அத்லடிக் கிளப்பினாலும் வழங்கப்படுகிறது. போட்டியின் வாகைசூடிகள் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் சிறப்பு விருந்தினரால் மதிப்பக்களிப்படுவார்கள்.

ஆர்வமுள்ள பங்களிப்பாளர்கள் www.ecofesttnau.com என்ற இணையதள முகவரியில் பதிவு செய்யலாம். மேலும் நிகழ்வு தொடர்பான விவரங்களை www.facebook.com/ecofest15 என்ற முகவரியில் அறியலாம்.

பதிவீட்டிற்கு செல்வன்.பி.ஏ.வினோத் குமார் (8760117714) மற்றும் செல்வன்.பி.என்.சசிசுதன் (8098590660) ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்